# மதவாச்சி பிரதேச சபை
# அநுராதபுர மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 22 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 21 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மதவாச்சி பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | |
|---|---|---|---|---|---|
| | | | வருமானம் ரூபா.000 | செலவினம் ரூபா.000 | பொறுப்புக்கள் ரூபா.000 |
| (அ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 04 | 768 | - | - |
| (ஆ) | நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபட்டவை | 05 | - | 63 | - |
| (இ) | நிதிக்கூற்றுகளில் அதிகரித்துக் காட்டுதல்கள் | 01 | - | 342 | - |
| | - மேற்படி - | 01 | - | - | 342 |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 10 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் ரூபா 16,410,463 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் அம்மீதிகள் ரூபா 11,957,668 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 556,384 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 411,494 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிகள் | |
| (i) 115 | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 216,888 ஆன பொருட்கள் தொடர்பாக இருப்பு உறுதிப்படுத்தலின்றி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) 163 | வருடத்தின் வருமானத்தைக் கணிப்பீடு செய்வதற்கான பொழிப்பு வருமானப் பதிவேடு (பி.ச 19) தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iii) 180 | செயலாளரினால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2) | 2009 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 55,000 முற்பணம் 2010 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | தாபன விதிக்கோவை VIII ஆம் அத்தியாயத்தின் 9.6 ஆம் பிரிவு | அரச விடுமுறை தினத்தில் கடமைகளுக்காக பிரயாணம் செய்வதலுக்காக விடுமுறை தினச் சம்பளம் செலுத்தும் செயற்பாட்டில் வேலை செய்ததாக கணக்கெடுக்க முடியாதிருந்த போதிலும் அவ்வாறு பிரயாணம் செய்த காலங்களுக்காகவும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 11,500 ஆன விடுமுறை தினக்கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 1989 செப்தெம்பர் 03 ஆந் திகதிய எல்ஜீ/03 ஆம் இலக்க சுற்றுநிருபம் | கடந்த 03 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கும் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு ஆகக் குறைந்த கேள்வி இறுதி வருடத்தில் வாடகைக்கு விடப்பட்ட தொகையை விட குறைவாக இருக்குமாயின் இறுதி வருடத்தில் வழங்கிய தொகை ஆகக் குறைந்த கேள்வியாகக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2010 இன் ஆகக் குறைந்த கேள்வித் தொகை தீர்மானிக்கும் போது 04 நிலையங்களின் ஆகக் குறைந்த கேள்வித்தொகை 2009 இனை விட குறைவான தொகைக்கு தீர்மானிக்கப்பட்டமையினால் சபை நிதியத்திற்கு ரூபா 467,150 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,433,832 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 311,692 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | | 2010 மதிப்பிடப் பட்ட | 2010 உள்ளவாறான | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பிடப்பட்ட | 2009 உள்ளவாறான | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) | வீதவரியும் வரியும் | 877 | 301 | 1,138 | 206 | 169 | 37 |
| (ஆ) | வாடகை | 2,487 | 1,236 | 601 | 2,257 | 972 | 1,285 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 600 | 797 | 491 | 550 | 565 | - |
| (ஈ) | ஏனைய வருமானம் | 460 | 1,692 | 3,439 | 2,500 | 100 | 2,400 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றம் ஒன்றினால் 2010 திசம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 1,686,269 தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 ஏனைய வருமானங்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 122 மற்றும் 152 ஆவது பிரிவுகளின் பிரகாரம் விளம்பர அறிவித்தல்களில் தனியார் ஊக்குவிப்பு வகுப்புக்கள் மற்றும் சட்டச் சேவை நிறுவனங்களிலிருந்து வரித்தொகைகள் அறவீடு செய்வதற்கான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் |
| **மீண்டுவரும் செலவினம்** | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| ஆளணி வேதனம் | 10,670 | 9,411 | 1,259 | 10,668 | 8,872 | 1,796 |
| ஏனையவை | 3,071 | 2,547 | 524 | 5,954 | 4,583 | 1,371 |
| உப மொத்தம் | 13,741 | 11,958 | 1,783 | 16,622 | 13,455 | 3,167 |
| மூலதனச் செலவினம் | 8,194 | 11,371 | (3,177) | 2,602 | 12,799 | (10,197) |
| மொத்தம் | 21,935 | 23,329 | (1,394) | 19,224 | 26,254 | (7,030) |

### 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

(அ) 2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|---|
| (i) | பதவி நிலைத்தரங்கள் | 01 | - |
| (ii) | இரண்டாம் தரங்கள் | 04 | 07 |
| (iii) | ஆரம்ப தரங்கள் | 18 | 19 |
| (iv) | வேறு (அமைய / தற்காலிக) | - | 04 |
| | மொத்தம் | 23 | 30 |

(ஆ) மீளாய்வாண்டில் பிரதேச சபையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எல்லையை விஞ்சி 04 அமைய ஊழியர்களைச் சேர்த்து ரூபா 907,200 சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

அரிசி மாவின் இணை உற்பத்திகளை பிரபல்யமடையச் செய்யும் செயற்திட்டமொன்று ஆரம்பிப்பதற்காக வடமத்திய மாகாண பிரதம அமைச்சிலிருந்து 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 814,000 பெறுமதியான உபகரணங்கள் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2010 திசெம்பர் 31 வரையிலும் அச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாதிருந்தமையினால் அவ் உபகரணங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.5.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 9,412,226 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலத்திற்கு மேற்பட்டிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,919,797 ஆக இருந்தது.

### 2.5.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,284,706 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 227,506 ஆக இருந்தது.

### 2.5.4 அசைவுறாத நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட அசைவுறாத நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 266,584 ஆக இருந்தது.

### 2.5.5 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 11,903,630 ஆக இருந்தது.

### 2.5.6 தீர்க்கப்படாத முற்பணங்கள்

2007 ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 55,000 கூட்டுத்தொகையான இரண்டு கட்டுநிதி மீதிகள் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(5) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2009 செப்தெம்பர் மாதத்தின் போது ரூபா 20,000 செலவு செய்யப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டிருந்த உள்ளகத் தொலைபேசி முறைமை 2010 யூலை 07 ஆந் திகதி வரையில் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 2.7 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 182 ஆவது பிரிவின் பிரகாரம் சபைக்கு அறவிட வேண்டிய ஏதாவது நிதியின் அளவொன்றைக் கைவிடுவதற்காக அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல் நாட்குறிப்பு இல. 15 இன் ஊடாக ரூபா 24,916 ஆன நிலுவை இறைச்சிக் கடை வருமானம் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

## 2.8 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் மக்களின் வசதிக்காக நலன்புரி நடவடிக்கைகளுக்குரிய செயற்பாடுகள் மற்றும் சுகாதாரம், பொது வீதிகள் பொதுப் பயன்பாடு சேவைகளுக்குரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத்திட்டமொன்றையும் அத்திட்டத்தினை மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.9 ஒப்பந்த நிருவாகம்

### நிர்மாணங்கள்

பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) மதவாச்சி கமநல சேவை நிலையத்தின் முன்பாகவுள்ள வீதிக்கு கிரவல் போடப்பட்டு A – 9 வீதியிலிருந்து மன்னார் வீதி வரை சபை நிதியத்தினை ஈடுபடுத்தி அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 263,060 இற்கு மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. மாகாண பொறியியலாளரின் நிலைமைக் கட்டுப்பாட்டு அறிக்கையின் பிரகாரம் வீதியை செப்பனிடுதல் மற்றும் கனம் என்பன திருப்திகரமற்றிருந்தமையால் கொடுப்பனவு செய்யும் போது ரூபா 173,490 ஆன தொகை மாத்திரம் செலுத்துவதற்கு உள்ளூராட்சித் திணைக்களத்தின் பொறியியலாளர் சிபார்சு செய்திருந்தார். வேலைக்காக இத்தொகை மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தும் அதன் பின்னர் உரிய முறையின் பிரகாரம் வேலையினைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 03 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது நிர்மாணங்கள் நிறைவுபெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நீதி மன்றத்திற்கு முன்னாலுள்ள கட்டுவெல வீதிக்கு 800 மீற்றர் கிரவல் இடப்பட்டு அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 303,646 தொகையில் மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மாகாண பொறியியலாளர் திணைக்களத்தின் ஊடாக செய்யப்பட்ட நிலைமைக் கட்டுப்பாட்டுப் பரிசோதனையின் பிரகாரம் கிரவலின் கனம் மற்றும் செம்மைப்படுத்துதல் என்பன

திருப்திகரமற்றதாக இருந்த போதிலும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 276,640 இல் ரூபா 202,480 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்